விலை: ரூபா. 2/-
(நன்கொடை)

# இந்து கலா சாரம்

இந்து சமய திங்கள் வெளியீடு

கௌரவ ஆசிரியர்: திரு. ஆர். வைத்திமாநிதி

மலர்: 1 ★ திருவள்ளுவர் ஆண்டு 2920 மாசித் திங்கள் 15 ஆம் நாள் (1.3.1989) ★ இதழ்: 7


## இந்து மதம் உயரிய மனித பெறுமானங்களை உள்ளடக்கியது!

—இந்து கலாசாரத்துக்கு இராஜாங்க அமைச்சர் விசேட செய்தி

**இலங்கை பல இனங்களையும் பல மதங்களைச் சார்ந்த மக்களையும் கொண்ட நாடு. பெரும்பான்மையான மக்கள் பௌத்த மதத்தைச் சார்ந்தவர்கள். சிறுபான்மை மக்கள் இந்து மதத்தை தழுவுபவர்கள். எனினும் இலங்கையில் நிலவும் மதங்களில் பழம் பெருமை வாய்ந்தது இந்து மதமாகும். தெற்காசியாவெங்கும் பண்டுதொட்டு பரவிக் காணப்படுவது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய பௌத்த மதமும் இந்து மதத்தை அடியொற்றியே தோன்றியது.**

**இவ்வாறு இந்து சமய கலாசார விவகார இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு திரு. பி. பி. தேவராஜ் அவர்கள் இந்து கலாசாரத்துக்கு அளித்த விஷேட பேட்டியில் கூறினார்.**

அமைச்சர் மேலும் கூறியதாவது: இந்து மதம் வெறும் மதச் சடங்குகளை மாத்திரம் உள்ளடக்குவதாக அமையாது. ஒரு வாழ்க்கை முறையை எடுத்துக் கூறி மக்களை வழிப்படுத்துவதாகவும் அமைந்தது. இந்து மதத்தோடு இணைந்த பழைமை வாய்ந்த கலாசார பாரம்பரியங்களும் தனித்தன்மை பெற்று விளங்குகின்றன. அத்துடன் இந்து மதம் உயரிய மனித பெறுமானங்களை உள்ளடக்கியதாகவும் அப்பெறுமானங்களை மேம்படுத்தும் இயல்புகளைப் படைத்ததாகவும் விளங்குகிறது.



மாண்புமிகு அமைச்சர் திரு .பி. பி. தேவராஜ்

இத்துணை சிறப்பு வாய்ந்த இந்து மதத்தின் பெருமைகளை உயர்த்தவும் அம்மதத்தைப் பேணிப் பாதுகாக்கவும் இந்துக்கள் மத்தியில் பல்வேறு சங்கங்களும் நிறுவனங்களும் எழுந்துசிறந்த முறையில்

( 12ம் பக்கம் பார்க்க)

# நமது நோக்கு

## மதமாற்றமும் மதபோதனையும்

காலத்தால் முதிர்ந்த கருணை வடிவம் கொண்ட அர்த்தமுள்ள எமது இந்து மதம் காரிருளை அகற்றும் கதிரவனைப்போல, மாயையிலிருந்து மக்களை விடுவித்து முத்தியின்பம் அடைய வழிகோலியாக அமைகின்றது.

ஏனைய மதத்தவர்களின் பிரசாரங்களில் கவர்ந்திழுக்கப்பட்ட இந்து மதத்தவர்கள் பலர் அண்மைக் காலமாக வேறு மதங்களைத் தழுவிக் கொண்டு வருகின்ற செயல் இந்து மதத்தைத் தம் இரு கண்களெனப் போற்றும் அன்பர்களது இதயம் ஆயிரமாயிரம் அம்புகளால் துளைக்கப்பட்டதுபோல் வேதனையால் வெதும்புகின்றது.

வம்சம் வம்சமாக முன்னோர்களால் வழிபட்டுப் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வந்த இந்து மதத்தை இன்றைய சந்ததியினர் தம் மூதாதையரைத் துச்சமென மதித்து அவர்களையும், அவர்களால் போற்றப்பட்டு வந்த அரிய பொக்கிஷமாகிய இந்து மதத்தையும் அடியோடு மாற்றி அவதூறு செய்தல், வெறும் வெளிவேஷத்தால் கவரப்பட்ட செயலே அன்றி வேறொன்றுமில்லையெனலாம்.

இந்து மதத்தின் மகத்துவங்களைத் தவறான வழிகளில் பிரசாரம் செய்வதும், அதன் குணாதிசயங்களை உண்மைக்கு மாறாக எடுத்தியம்புவதும், இந்து மதத்தவர் மத்தியில் ஆழ்ந்த கவலையை உண்டு பண்ணியுள்ளது.

சைவப் பெரியார்களும், சிவாச்சாரியார்களும்; ஏன் இந்து மன்றங்களும் கூட இந்துமதத்தின் மகிமைகளையும், அதன் பெருமைகளையும் வரலாறுகளையும், ஆங்காங்கேஅரியசொற்பொழிவுகளாலும், கதாப்பிரசங்கங்களாலும், வில்லுப் பாட்டாலும் இனிமையாக அறிவுறுத்துவதால் மக்கள் மத்தியில் இந்துமதத்தின் அம்சங்களை உணரச் செய்யலாம். இந்து மதத்தின் உண்மையான தோற்றத்தினை வெளிக் கொணர்ந்து மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள தவறான எண்ணங்களை, குறிக்கோள்களை மாற்றியமைக்கலாம் என்பதே இந்து கலாசாரத்தின் பணிவான வேண்டுகோள்!

அத்துடன் எமது மதத்தின் பெருமைகளையும், மகிமைகளையும் வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றில் கூடுமானளவு இடம் பெறச் செய்ய வேண்டும்.

இப்படியான போதனைகளால் அவல நிலையிலுள்ள எமது இந்து மதம் மீண்டும் புத்துயிர் பெற்றுப் புதுமணங் கமழும் என்பதே இந்து கலாசாரத்தின் அபிப்பிராயமாகும்!

இந்து கலாசார அமைச்சு, உலக இந்து மன்றங்கள் இவற்றில் கூடிய கவனமெடுத்து ஆவன செய்வார்கள் என இந்து கலாசாரம் எதிர்பார்க்கின்றது!

# இந்து சமயத்தைக் காக்க நமது பணியை தீவிரமாக்க வேண்டும்

*ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள்*

தற்போது நமது நாட்டில் இந்து சமயத்தை பாதுகாக்க நாம் எடுத்துக் கொண்ட பணி சமுத்திரத்தில் அணை கட்ட அணில் செய்த உதவி போலத்தான் இருக்கிறதே தவிர வானரச் சேனை செய்தது போல இல்லை.

இந்து சமயத்துக்கு தற்போது ஏற்பட்டுள்ள பல்வேறு சோதனைகளால் நாம் நமது பணியைத் தீவிரமாக்க வேண்டியதிருக்கிறது.

இதற்குச் சமயத்தில் உள்ள பெரியவர்கள் முன் வர வேண்டும்.

முன்பு நமது பெரியார்கள் தமது குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்களுடைய மூதாதையர்களின் பெயர்களை, கடவுளின் பெயர்களை வைத்து அழைப்பார்கள். ஆனால் இன்று மாறி வருகிறது.

நமக்கு இறைவனின் பெயரால் பெயர் வைக்கப் பட்டது. பரம்பரையாக இறைவனின் பெயரை வைத்துக்கொள்ளும் இந்து மதம்.

இதை எல்லாம் உணர இந்து சமய கோட்பாடுகளை தெரிந்துகொள்ளச் சமய நூல்களை அனைவரும் படிக்க வேண்டும். இந்து சமய தத்துவ பாடல்களை இறை வழிபாட்டுக்குப் பயன்படுத்த வேண்டும். அதன் மூலம்—இறை வழிபாட்டுடன் சமயமும் வளரும்.

சமய உணர்வின் கீழ் பக்தி வளர வேண்டும். இதற்கு ஒவ்வொருவரும் சமயப் பணிகளைத் தொடங்க வேண்டும்.

ஒவ்வொரு ஊரிலும், இந்து சமய மன்றம் என்ற பெயரில் சிறு அமைப்பை ஏற்படுத்தி ஏற்கனவே இருக்கும் மன்றங்களுடன் இணைத்துக் கொண்டாலும் பரவாயில்லை.

போட்டியில்லாமல் கூட்டாக இருந்து செயல்பட வேண்டும்.

தற்போது விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதற்கு வரையிலும் கூட்டுறவு வந்துள்ளது. அதுபோல சமயப் பணிக்கும் நமக்குள் ஒரு அமைப்பு ஏற்பட வேண்டும்.

நதிகள் வெவ்வேறு இடங்களில் தோன்றுகின்றன. வெவ்வேறு பெயர்களில் இவை அழைக்கப்படுகின்றன.

சமுத்திரத்தில் கலந்து விட்ட பிறகு அங்கு அந்த நதிகளுக்கு பெயர் இல்லை. அதுபோல இந்து சமய மன்றங்கள் இந்து சமயம் என்ற சமுத்திரத்தில் கலந்துவிட்டால் வேறுபாடு இல்லை.


## நமது ஆசிரியர் குழு

திரு. ஏ. எம். துரைசாமி (நிருவாகம்)
திரு. சிறீ இரங்கநாதன
திரு. எஸ். அரவிந்தன்
திரு. நா. ஹரிதாஸ்
திருமதி. சுபாஷிணி சுந்தரராஜன்
திருமதி. அ. யோகசுந்தரம்

# சிவராத்திரி



இன்றைய கலியுகத்தில் விஞ்ஞானம் வானளாவ உயர்ந்துள்ளது. எங்குமே விஞ்ஞானம்! எதிலுமே விஞ்ஞானம்! எல்லாமே விஞ்ஞான யுகம்!

சுருங்கக்கூறின், ஒரு சிறு பரிசோதனைக் குழாய் மூலம் குழந்தையையே உற்பத்தி செய்யுமளவிற்கு விஞ்ஞானம் சாதனை படைத்துள்ளது. ஆயினும், அந்தப் பரிசோதனைக் குழாய்க் குழந்தை உற்பத்திக்குத்தேவையான ஆதாரமான மூலப்பொருள் எவ்வாறு கிடைக்கப்பெறுகின்றது!

நவீன விஞ்ஞான யுகத்தால் அதனைச் செயற்கையாக உற்பத்தி செய்துவிட முடியுமா?

அதுதான் இயற்கை! இயற்கையே இறைவன்!

மனித வலுவிற்கு எட்டாத மிகவும் அப்பாற்பட்ட ஒரு மாபெரும் சக்தி உண்டு. அதுவே சர்வ வல்லமை படைத்த எல்லாம் வல்ல பரம்பொருளான கடவுள் ஆகும். இச்சக்தியையே இன்று நாம் வெவ்வேறு ரூபங்களில் காணக்கூடியதாக வடிவமைத்துள்ளனர்.

கருங்கல்லைக் கடவுளாக நினைத்து வழிபடலாம்! ஆனால் கடவுளைக் கருங்கல்லாக எண்ணுவது இழுக்கு.

அனைத்து மதங்களுமே விரதம் நோன்பு ஆகியவற்றை அனுட்டித்து இறைவழிபாட்டால் முத்திநிலை எய்தும் சன்மார்க்கவழியை வலியுறுத்தி வந்துள்ளன.

எல்லாம் வல்ல சிவபெருமான் சைவ சமயத்தவரின் முழுமுதற் கடவுளாவர். சக்தியே சிவம். சிவராத்திரி திருவாதிரை, பிரதோஷம் போன்ற சிவ விரதங்கள் இறைவனுடன் இரண்டறக் கலக்க வழி சமைத்திட்டபோதிலும், சிவராத்திரி அவற்றுள் மகத்துவமானதாகும்.

**நாகன் ஹரிதாஸ்**

சந்திர தேய்பிறையில் பதினான்காம் நாளன்று, சூரியன் கும்பத்திலிருக்கும்பொழுது வரும் சிவராத்திரி எல்லோருக்கும் உரிய ஒரு புனிதமான நாளாகும். சூரியனைவிடச் சந்திரனைச் சார்ந்ததாக இருப்பதனால் அவ்விழாவை சிவராத்திரி என அழைக்கின்றனர். ஏனைய வெறும் இரவுகளைவிட இந்த இரவு மாத்திரம் சிவனுடைய இரவாகும்.

## உள்ளம் ஒரு கோயில்

இருபத்து நான்கு மணித்தியாலங்களைக் கொண்ட ஒரு நாள் இரவு பகலாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இருளை மட்டும் கொண்ட காலம் சிவராத்திரி என அழைக்கப்படுகிறது. எப்பொருளையும் அழிக்காமல், அதன் தன்மை மாறாமல், அதை மறைத்து பொருளே இல்லாததுபோல் தோன்றச் செய்வது இருளின் விசித்திரமான தன்மை! இருள் ஒரு தனிப் பொருள் அல்ல; அது எங்கும் வியாபித்து இருப்பினும் அதனால் தனித்து இயங்க ஒரு போதும் இயலாது. ஏதேனும் ஒன்றைச் சார்ந்ததாகவே இருக்க முடியும். அதே நேரத்தில் எதை அவ்விருள் சார்ந்திருக்கின்றதோ அப்பொருளை மறைக்கும் விசித்திர வல்லமையுடையது. எவ்வளவு காலந்தான் இந்த இருளால் ஆட்சி செலுத்த முடியும்? ஒளி தோன்றியவுடனே இருள் விலகிவிடும். இருளால் மறைந்த பொருளும் நம் கண்களுக்குப் புலப்படும்.

இதே போன்றுதான், நமது உள்ளமும் கொடிய இருளால் மறைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மனித உள்ளத்திலும் இறைவன் நீக்கமற நிறைந்திருக்கின்றான். ''உள்ளம் ஒரு கோயில்'' ஆனால் கொடிய இருளால் அந்தப் பரம்பொருள் மறைக்கப்பட்டுள்ளது. இருப்பதை மறைக்கும் இருளை நீக்கி ஒளியைக் காணும் விரதமே ''சிவன் ராத்திரி'' விரதம் ஆகும்.

## அடி முடி தேடிய கதை

பிரம்மாவும் விஷ்ணுவும் தங்களில் யார் பெரியவர் என வாதித்துக் கொண்டிருக்கையில், அவர்களுடைய செருக்கை அடக்குமுகமாக அவர்கள் முன் ஆகாயத்தையும் பூமியையும் அளாவிய தாய் ஒரு இலிங்க வடிவான ஒளிப்பிழம்பு தோன்றிற்று. அவர்கள் இருவரும் தங்கள் வாதத்தை நிறுத்திக்கொண்டு அவ்வொளிப்பிழம்பின் அடியையும் முடியையும் கண்டு தம்பெருமையை நிலைநாட்டுவதற்கு திடசங்கற்பம் பூண்டனர்.

விஷ்ணு காட்டுப் பன்றி வடிவில் பூமியைப் பிளந்துகொண்டு அவ்வொளிப்பிழம்பின் அடியைத் தேடியும்; பிரம்மா அன்னப் பறவை வடிவில் அவ்வொளிப்பிழம்பின் முடியைக் காணவும் விரைந்தனர். எவ்வளவோ முயன்றும் ஈற்றில் தோல்வியுற்றனர். தங்கள் அகந்தையை ஒழித்து இறைவனை பணிந்தனர். இந்த இலிங்கோற்பவ மூர்த்திதோன்றி பிரம்மா, விஷ்ணுவின் செருக்கை அடக்கிய அன்றைய தினமே ''சிவராத்திரி'' ஆகும்.

ஈழத்தில் பல சிவாலயங்களில் சிவராத்திரி விழா கொண்டாடிய போதிலும், பாடல் பெற்ற திருத்தலமாகிய திருக்கேதீச்சரத்தில் சிவராத்திரி விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. அடியார்கள் பாலாவியில் நீராடி ஈர உடையுடன் குடத்தில் நீர் கொண்டுவந்து லிங்கப்பெருமானுக்குத் தாமே அபிஷேகஞ் செய்யும்காட்சி வேறு எத்தலங்களிலும் காணல் அரிது.

நள்ளிரவு காலமே இலிங்கோற்பவ காலமாகும். நாள் முழுவதும் உணவை விடுத்து இரவு முழுவதும் கண் விழித்துச் சிவனடியார் கூட்டத்தில் சிவ சிந்தனையில் ஈடுபட்டு இவ்விரதத்தைக் கடைப்பிடிப்போமாயின் சிவ உணர்வு நம் உள்ளத்தில் தோன்றுவது திண்ணம்.

அந்நாளின் இரா விழிப்பு நாம் என்றும் எதிலும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். கண் விழிப்புடனிருக்க வேண்டும்என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதால், இப்புனித நாளில், தொடர்ந்து சினிமாப்படம் பார்த்தல், சீட்டாட்டம் ஆடுதல் மற்றும் அர்த்தமற்ற முறையில் கண் விழித்தலால் எவ்வகையிலேயினும் சிவனின் அனுக்கிரகத்தைப் பெற இயலாது.

ஒற்றைக் காலில் நின்றுகொண்டு உறுமீன் வருமள

(14ம் பக்கம் பார்க்க)

# ரிஷிகேஷத்தில் வாழும் இலங்கைச் சாமியார்

சந்திரிகா சோமசுந்தரம்

இலங்கையில் பிறந்து இந்தியாவின் வட கோடியில் ரிஷிகேஷ் மலைச்சாரலில் தவ வாழ்வில் ஈடுபட்டிருப்பவர் சுவாமி யோகேஸ்வரானந்தா அவர்கள்.

அவர்களது ஆன்மீக சொற்பொழிவுகள் இமயம் முதல் அமெரிக்கா வரை பிரபல்யமானது. தவமும், யோகமும், தவத்தின் பயனும் செறிந்தவர் சுவாமிஜி.

எந்த வித மட அமைப்போ அல்லது ஆன்மீக குழுக்களோ தமது ஆத்மீக தேடலுக்கு விடை கூறுது என்பதை உணர்ந்தவர் இவர். அதனால் சுயமாகவே ஒரு தவ நெறியில் ஈடுபட்டு ஒழுகி வந்துள்ளார். சுய முயற்சியினால் ஆன்மீக ஒளியை அடையலாம் என்பது இவரதுவாதம்.



சுவாமி
யோகேஸ்வரானந்தா

காவி உடைக்குள் கண்களில் நிரம்பிய ஒளியுடன் ஞானத் துறவியாக நிற்கும் இவர் தனது இருபதாவது வயதில் உலக வாழ்க்கையை வெறுத்து தன் ஆன்மிக பயணத்தை தொடங்கினார். கடந்த பல ஆண்டுகளாக உலகலாவிய பயணங்களையும், தியானம் தொடர்பான சொற்பொழிவுகளையும் மேற்கொண்டு வரும் இவர் ஒரு நூலையும் படைத்திருக்கிறார்.

## ஆழ்நிலத்தியானம் தொடர்பான விளக்க ஒலி நாடாக்களை விரைவில் வெளியிட இருக்கின்றார்

'யோகத்தைப் புரிந்து கொள்ளுதல்' என்ற இவரது அனுபவ நூல் இலங்கையிலும் இந்தியாவிலும் தற்போது கிடைக்கிறது. திரு. சண்முகராசா 42–3, ஜீ. ஜீ. கட்டிடம், அண்ணாசாலை, சென்னை 2 இலும், கொழும்பில் 170, முதலாம் குறுக்குத் தெரு, கொழும்பு 11 இலும் கிடைக்கின்றது.

ஆழ்நிலத் தியானத்தை சாதாரண மக்களுக்குச் சொல்லித்தரவிரும்பும்இவர் இது தொடர்பான விளக்க நூல்களையும் விளக்க ஒலி நாடாக்களையும் விரைவில், வெளியிட இருக்கிறார். குரு இல்லாத இவருக்கு சீஷர்களும் இல்லை. சுயமுயற்சி இறைவனை எட்ட வழி காட்ட வல்லது. எனினும் தன்னுள் இருக்கும் இறைவனை இணைய தவமே வழியாகும் என்கிறார்.

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

★ மலையகத்தில் மதமாற்றக் கெடுபிடியை நிறுத்து !

★ இந்து சமயம் போதிக்க போதிய ஆசிரியர்களை நியமி !!

★ ஆசிரியர்கள் பற்றுக் குறை என்பது கேலிக்கூத்து !!!

★ பெரும்பான்மையாக இந்து சமயப் பிள்ளைகள் படிக்கும் பாடசாலைகளில் இந்து அதிபர்களை நியமி !!!!

மேற்கூறிய கோரிக்கைகளை வென்றெடுக்க

## இந்து இளைஞர் மகாநாடு

(கொழும்பில் நடைபெறவிருக்கிறது. விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.)

**இந்து இளைஞர்களே அணிதிரளுங்கள்!**

# அநுட்டானத்தின் அவசியம்

''இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்'' என்பது ஆறுமுக நாவலர் வாக்கு. சைவ சமய மரபிலே பிறந்தவர்கள் எல்லோரும் ஏழாம் வயதிலாவது, ஒன்பதாம் வயதிலாவது சமய தீட்சை என்னும் சிவ தீட்சை பெற்று, அன்று தொடக்கம் அநுட்டானம் செய்து வருதல் வேண்டும் என்பர்.

அநுட்டானத்தால் தேக சுகம், புனிதம், தீர்க்காயுள் சுறுசுறுப்பு, நோயின்மை, மகிழ்ச்சி முதலிய நன்மைகள் உண்டாகும். ஸ்நானம் செய்தபின் சுத்த சலம் கொண்டு அநுட்டானம் பண்ணி, பஞ்சாட்சரசெபம் செய்து, தோத்திரம் பண்ணல் வேண்டும் என்பர்.

## ஒழுக்கத்தின் அடிப்படை

அநுட்டானம் என்பது ஆசாரம், ஒழுக்கம் எனப் பொருள் தரும். சைவசமயத்தவரின் அநுட்டானம் சைவாசாரம் எனப் பெயர் பெற்றது. அநுட்டானம் சைவ ஒழுக்கத்தின் அடிப்படை.

உமாபதி சிவாசாரியார் சைவாசாரத்தை ஒழுங்கு செய்துள்ளார். அவரின் பின்வந்த தத்துவப்பிரகாசர் தமது தத்துவப் பிரகாசம் என்னும் நூலில் அனுட்டானத்தைச் சரியையிற் சரியை எனப் புகழ்ந்து கூறியுள்ளார்.

கமலை ஞானப்பிரகாசர் சைவானுட்டான அகவல் என்னும் நூல் செய்துள்ளார். அதற்கு அச்சுவேலி குமாரசுவாமிக் குருக்கள் அருமையான உரை எழுதியுள்ளார். இன்னும் பழநி வேதசிவாகம பாடசாலை ஈசானசிவாசாரியார், தேவகோட்டை தற்புருஷதேசிகர், திருச்சி பட்டுசுவாமி ஓதுவார் முதலான பெரியவர்கள் அநுட்டான விதிகளுக்கு விளக்கம் எழுதியுள்ளார்கள். அவை இந்நூலில் ஆங்காங்கே இடம் பெறுகின்றன.

## சைவ அநுட்டானம் செய்தல்

சிவதீட்சை பெற்றவர்களே சைவ அநுட்டானஞ் செய்வதற்குத் தகுதி பெற்றவராவர். சைவாநுட்டானத்தின்போது மனம், வாக்கு, காயம் ஆகிய முக்கரணங்களும் ஒன்றுபடுதல் அவசியம். சைவாநுட்டானம் என்பது பாவனை, மந்திரம், கிரியை என முத்திறப்பட்டு, முக்கரணங்களாலும் செய்யப் பெறுவதாகும். பாவனையின்றி மந்திரங்களும் கிரியைகளும் பயன்தரமாட்டா. கிரியைகள் முத்திரைகளை அடிப்படையாகக் கொண்டவை. முத்திரைகள் என்றால் கைவிரல்களை வளைத்தும் நிமிர்த்தியும் சில குறிப்புகளை உணர்த்துதலாம்.

சைவ அனுட்டானத்தால் ஆசாரம் ஒழுக்கம் தாமே வந்தடையும், வாழ்க்கை புனிதமாகும். நாம் ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டுச் செய்ய வேண்டிய சம்ஸ்காரங்கள் என்னும் நற்கருமங்களுள், தீட்சைபெறுதல், நித்திய அநுட்டானஞ் செய்தல், சிவாலய தரிசனஞ் செய்தல் திருமுறை ஓதுதல், திருவைந்தெழுத்து என்னும் பஞ்சாட்சர செபஞ் செய்தல் முதலியன மிகவும் முக்கியமானவையாகும். இவை சிவ புண்ணியச் செயல்கள், சைவ நெறிக்குரிய ஒழுக்கங்கள்.

## நால்வழி ஒழுகத் தகுதி

சைவசமயத்தவருக்குரிய சரியை, கிரியை, யோகம் ஞானம் என்னும் வழியிற் செல்வதற்கு யோக்கியத்தைத் தருவது சமயதீட்சை என்னும் சிவதீட்சையாகும் சிவ தீட்சை பெற்றவரே சைவசமயத்தவர் என்னும் தகுதி பெற்றவராவர். தீட்சை பெற்றவரே சைவ அனுட்டானம் செய்யத் தகுதி பெற்றவராவர். தீட்சை பெற்றவரே தானம் தருமம், தத்தம், தவம் முதலிய சிவபுண்ணியச், செயல்களைச் செய்வதற்குத் தகுதி பெற்றவராவர். சிவத்தொண்டு செய்வதற்குச் சிவ தீட்சை இன்றியமையாதது. பிறவிக் கடலைக் கடப்பதற்குத் தோணி போன்றது தீட்சை என்று வாயு சங்கிதை என்னும் பெரிய நூல் கூறுகிறது.

## ஆன்ம ஈடேற்றம்

சைவராகப் பிறப்பதற்குப் பெருந் தவம் செய்ய வேண்டும் என்பர். சைவ சமயத்திற் பிறந்தவர்களுக்குச் சிவபெருமான் அருளிய முதல் நூல்கள் வேதம், சிவாகமம் என்னும் இரண்டுமாம். இவற்றுள் சிவாகமங்கள் சைவானுட்டானங்களைச் சிறப்பாகக் கூறுவன. சிவாகமங்கள் கூறுவனவற்றைப் பத்ததிகள் விளக்கிக் கூறுகின்றன. ஆகமக் கருத்துகளை எல்லோரும் விளங்கிக் கொள்ளுமாறு அறிவாளிகளாய சிவாசாரியர்கள் பத்ததிகள் செய்துள்ளார்கள். அகோர சிவாசாரியர் செய்த பத்ததிகள் சைவ உலகில் புகழ் பெற்றுள்ளன.

(10ம் பக்கம் பார்க்க)

---

## இந்து கலாசார இணையமைச்சருக்கு இதயபூர்வமான வாழ்த்துக்கள்!

இந்து கலாசார இணையமைச்சராகப் பதவியேற்றுள்ள புதிய அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் அவர்களுக்குக் கொள்ளுப்பிட்டி இந்து கலாசார மன்றம் தமது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

பாரம்பரியமாக போற்றி பேணப்பட்டு வந்த எமது இந்து கலாசார மகிமைகள் இன்று ஒளியிழந்து மங்குந் தறுவாயில் உள்ளன. மீண்டும் ஒளி பெற்று, உலகெங்கும் எமது இந்து மதத்தின் மகிமைகளைப் பறைசாற்ற, புதிய இணையமைச்சர் தமது ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை உடனுக்குடன் செயல் வடிவில் எடுப்பார் என இந்து கலாசார மன்றம் உறுதியாக நம்புகின்றது.

இணையமைச்சர் தமது பணியைச் செவ்வனே நடாத்தவும், அவரது உன்னதமான சேவையில் ஏற்படும் எவ்விதமான இடையூறுகளையும் முறியடிக்கத் திடகாத்திரமான மனோ நிலையையும் தமிழ் மொழிக்காக தயங்காது குரல் கொடுக்க தளரா நெஞ்சையும் எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு அருளி, என்றென்றும் அப்பரம்பொருள் உறுதுணையிருக்க வேண்டுமென தமிழ் பேசும் நல்லுலகம் பிரார்த்திக்கின்றது.

## சிறுவர் பகுதி

# பாலவிகாஷ்

அன்புள்ள தம்பி தங்கைகளே!

பாலவிகாஷ் கல்வி முறை பகவான் அருளிய பாடத் திட்டமாகும். சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை என்ற உன்னத இலட்சியங்களை அடைவதற்கான ஒழுக்கக் கல்வியே இவ்வமைப்பின் முக்கிய இலக்கு.

பிரசாந்தி நிலையம், பம்பாய் அனந்தப்பூர் போன்ற இடங்களில் பெருங் கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் அமைக்கப்பட்டுள்ள பாலவிகாஷ் உலக கவுன்சில் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டவரும், கொள்ளுப்பிட்டி ஸ்ரீ சத்ய சாயி பாபாபஜன் மண்டலியின் முன்னாள் செயலாளருமான சகோதரி திருமதி கமலாம்பிகை பரஞ்சோதி, பி.ஏ. (சமய சிறப்பு) இன்று உங்களுக்குப் பாலவிகாஷ் கல்வி முறையின் அடிப்படைத் தத்துவத்தை விளக்குகிறார். இந்த அருமையான கட்டுரையை நீங்கள் ஒவ்வொருவரும் படிக்க வேண்டும். படிப்பதோடு நின்றுவிடாமல் இந்தக் கல்வி முறையின் சிறப்பைப் பற்றி எழுதியனுப்புங்கள்.

—அன்புள்ள அக்கா
**அமரா**

---

# பாலவிகாஷ் கல்விமுறை

## மாணவ சமுதாயத்திற்கு வரப்பிரசாதம்

மனிதவாழ்வில் மறக்க முடியாத பசுமை நிறைந்த இனிய பருவம் பாலபருவம் அது. உலகத்துக் கவலைப் புகை, உள்ளக் கண்ணாடியில் படியாத உன்னத பருவம் அது. இப்பால பருவத்தில் அடியெடுத்து வைக்கும் இளம் சமுதாயத்தின் கையிலேயே நாட்டின் எதிர்கால நலமும் சமுதாய முன்னேற்றமும் தங்கியுள்ளது. பள்ளி எனும் விளைநிலத்தில் விதைக்கப்படும் பாலக மணிகள், நாளை நாட்டின் நலனுக்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும், பயனளிக்கும் நன்மணிகளாக விளைய வேண்டும். பணமும் பதவியும் பட்டமும் தரும் ஏட்டுக் கல்வியால் வெறும் தன்னலமே மிகும். மாறாக பாலவிகாஷ் அமைப்பு நல்கும் உள்ளம் பண்பட்ட ஆத்மீகக் கல்வியினால் பொதுநலமும் அமைதியும் ஆனந்தமும் பெருகும். இப்பரந்த நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டே சாயி இயக்கத்தில் பாலவிகாஷ் அமைப்பு மிக முக்கிய இடம் பெறுகின்றது.

பகவான் அருளிய இவ்விசேட பாடத்திட்டத்தில் 6 தொடக்கம் 9 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஒரு பிரிவினரையும் 10–12 வயதுக்குட்பட்டவர்கள் இன்னொரு பிரிவினராயும் வகுக்கப்பட்டுள்ளனர். சத்தியம் தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை என்ற உன்னத இலட்சியங்களை அடைவதற்கான ஒழுக்கக் கல்வியே இவ்வமைப்பின் முக்கிய இலக்கு. இச்சீரிய கல்வி முறைக்கென பிரசாந்தி நிலையம், பம்பாய் ஆனந்தாப்பூர் போன்ற இடங்களில் பெருங் கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இக்கல்வி நிலையங்கள் வெறும் பி.ஏ., எம்.ஏ. க்களை மட்டும் உருவாக்காமல், மானுடவியல் அடிப்படையில் மனித சிலங்களில் பயிற்சி உடையோராய், பண்பாளராய் மக்கள் சேவையாளரை உருவாக்கியுள்ளன.



**திருமதி. கமலாம்பிகை பரஞ்சோதி (பி. ஏ.)**

பாரதம் பல நூற்றாண்டுகளாக வேதம், புராணம் உபநிஷத்துக்கள் இன்னும் விலை மதிப்பிடற்கரிய பல ஆன்ம போதனைகளைப் பொக்கிஷமாகப் போற்றி வந்துள்ளது. மனித சமுதாயத்தோடு பேரானந்தத்தைப் பகிர்ந்துள்ளது. அதனை அடியொற்றியதே பாலவிகாஷ் கல்வி முறை. கல்விமான்களாலும் அரசியல் மேதைகளாலும் பாராட்டுப் பெற்ற இக்கல்வித் திட்டத்தை மாநில அரசாங்கங்களே தமது கல்வி அமைப்புகளில் சேர்த்துக் கொள்ளுவதற்குத் திட்டமிட்டுள்ளன. இதனை பகவான் அவர்கள் உண்மையான கல்வியென்றால் தன்னலத்தை ஒரு மாணவனிடமிருந்து அகலச் செய்ய வேண்டும். அக்கல்வி உத்தியோகம் பெறுவதற்கு மாத்திரம் அமையக் கூடாது. ஆனால் இன்றைய கல்வி முறையோ சுயநலத்தினையும் பொறாமைத் தீயையுமே வளரச் செய்கின்றது. மனிதனின் தெய்வீகத் தன்மையைத் தவிடு பொடியாக்குகின்றது. உண்மையில் கல்வி ஒருவனுக்குத் தன்னம்பிக்கையை ஊட்ட வேண்டும். கருகி ஓடும் கால வெள்ளத்திற்கு ஈடு கொடுக்கக் கூடிய நெஞ்சுரமும் மனவலிமையும் நல்க வேண்டும். தன்னிலும் குறைந்த பரிதாபத்திற்குரிய நிலையில் உள்ளவர்களில் அன்பு கொள்ளவும், அவர்களுக்கு கூடிய அளவு சேவை செய்யவும் தூண்ட வேண்டும். கல்வியின் இறுதி முடிவு ஒழுக்கமே. நல்லொழுக்கம் இல்லாதோர் கல்விமானாகக் கருதப்படார்.

இளவயதில் பெறக்கூடிய கல்வியும் அதன் உன்னத இலட்சியங்களுமே ஒருவனைப் பிற்காலத்தில் தேசபக்தனாகவோ கொடூரம் நிறைந்த கொலைக்காரனாகவோ மாறச் செய்கின்றது. இளம் பிராயத்தில் நல்லொழுக்கம் நற்குணங்கள் பயிற்றப்படாதமையினாலேயே யூதாஸ் என்பவன் வயது வந்ததும் மாபெரும் பாதகனாக கிறிஸ்து நாதரையே காட்டிக் கொடுத்தான்.

எனவே இளமையில் பெறும் கல்வி மிகவும் முக்கியமானது. இதனை அடிப்படையாகக் கொண்டே பகவான் மிக நுணுக்கமாக ஆராய்ந்து பாலவிகாஷ் மாணவர் பாடத்திட்ட

(12ம் பக்கம் பார்க்க)

# சிவ - விஷ்ணு பிரம்ம லோகங்கள்

புராணங்கள் என்றால் சரித்திரக் கதை என்று பொருள் கொள்ளலாம். சிவ லோகமாகிய கைலாய மலையில் சிவ—சக்தி நடனம் நிகழ்வதாகவும், சிவகணங்கள் சோம பானம் அருந்தி ஆட்டம் போடுவதாகவும், சிவனுடைய முடி செம்பட்டை பொருந்தியது என்றும் சிவபுராணங்கள் உருவகித்து கூறுகிறது. சிவனுடைய தன்மைகள் அடங்கிய நிலப் பகுதியே சிவலோகமெனப்படுவது துருவப் பிரதேசம், ருஷ்யா, ஸ்வீடன், இங்கிலாந்து முதலிய நாடுகள் சிவலோகத்தில் அடங்கியுள்ளன. பொதுவாக இங்கு வாழும் மக்கள் செந்நிற முடியுடன் காணப்படுவார்கள். உடல் பலவாறாய்ச் சுழற்றி 'பாலே' நடனம் ஆடுவார்கள்.

சுவீடன் நாட்டுப் பசுக்களே உலகில் அதிக அளவில் பால் கொடுக்கும் பசுக்களாகும். இதனால் சிவனாரின் வாகனமான காளையை அறியலாம். இங்கிலாந்து நாடோ ''ஸ்காட் விஸ்கி'' என்ற ருசிகரமான விஸ்கியை உலக மெங்கும் ஏற்றுமதி செய்து பல கோடிக் கணக்கான டாலர்களை அந்நிய செலாவணி மூலம் ஈட்டுகிறது. இதனை சிவ கணங்கள் அருந்தும் சோம பானத்திற்கு உவமையாகக் கூறலாம்.

பிரும்மாவின் சக்தியை தன்னகத்தே கொண்ட நிலப்பரப்பே பிரும்ம லோகமெனப்படும் குமரப் பருவத்துக்குரிய குட்டையான உடலுடனும் மஞ்சள் நிற

எஸ். சேதுபதி

மேனியுடனும் இங்குள்ள மக்கள் காணப்படுவார்கள். சீனா, ஜப்பான் முதலிய நாடுகள் இதில் உள்ளன. ஐரோப்பா நாட்டில் குதிரைகளும் கழுதைகளும் அதிகம். மத்தியதரைக் கடலைப் பாற்கடலாகவும் பாற்கடலை ஒட்டிய ஐரோப்பாவை, விஷ்ணு பூமியாகவும் புராணங்கள் தெரிவிக்கின்றன. இங்குள்ள மக்கள் வெளிர் மேனி படைத்தவராய் இருந்த போதிலும் தலை மயிர் சிலருக்கு கறுத்துக் காணப்படும். கறுப்பு வெளுப்புக் கலந்த சாம்பல் நிற மேனியுடையவராகவும், கறிய முடி உள்ளவராகவும் விஷ்ணுவை உருவகிப்பது மேற்கூறிய தன்மையினால்தான்.

ஆபிரிக்காவில் வாழும் பழங்குடி மக்கள் நரபலியிடுகிறார்கள். இலைகளால் ஆன ஆடைகளை உடுத்துவார்கள். நெருப்பைத் தாறுமாறாகப் பயன்படுத்துவார்கள். சாம்பலையும் கரித்துண்டுகளையும் அருவெறுப்பான வகையில் சிதறவிட்டிருப்பார்கள். ஈட்டி முனையில் ஒருவரை மற்றவர் குத்தி மகிழ்வர். சமயத்தில் நெருப்பில் தூக்கிப் போட்டும் மகிழ்வர். மேற்கூறிய தன்மைகளை நரலோகத்தில் வாழும் ஜீவர்களை எமதூதர்கள் சித்திரவதை செய்வதற்கு ஒப்பாகக் கூறலாம். தாகத்துக்குத் தண்ணீர் கிடைக்காத ஜீவர்கள் வாழும் நரலோகத்திற்கு இணையாக அரேபியா, மொராக்கோ, லிபியா, சூடான், ஏமன் (நமது எமலோகமா?) இரான், இராக் நாடுகளைக் கூறலாம்.

உலகிலேயே பெரிய அளவு படைத்த சமவெளி சிந்து—கங்கைச் சமவெளி (பரப்பு சுமார் 30,000 ச. மைல்). இது வட இந்தியாவில் உள்ளது. பர்மாவில் முதிய வயதடைந்த மங்கையர் கூட இளமைப் பொலிவுடன் காட்சி தருவார்கள். ஒளி வீசும் அழகிய மலர்களடங்கிய சோலைகளும் ஐராவதி ஆறும் இங்கு உள்ளது. இவ்விரு நிலப் பகுதிகளே தேவலோகமெனப்படுவது.

பொதுவான அமைப்பில் ஐரோப்பிய மக்கள் நல்லவர்களே! பிறர் வாழ்க்கையில் குறுக்கிட்டு குழப்பம் விளைவிப்பதில்லை வாழ்க்கை வாழ்வதற்கே என்ற கொள்கைப்படி ஆடவர் பெண்டிர் சரஸ சல்லாபங்களில் ஈடுபட்டு ஒருவரையொருவர் மதித்து அன்புடன் பழகி உல்லாசமாக வளைய வருகிறார்கள்.

புண்ணிய காரியங்கள், செய்யும் ஜீவர்கள் மீண்டும் பிறவியெடுக்கையில் பூலோக சுவர்க்கமாகிய ஐரோப்பா, ஜப்பான் ஆகிய நாடுகளில் பிறந்து முற்பிறவியில் செய்த புண்ணிய காரியங்களுக்கு ஏற்ப சுகமாக வாழ்கின்றனர். புண்ணியத்தின் விளைவாக பிறப்பின் தன்மையைக் களைந்தவர்கள் இத்தகைய அமைப்பு, உடைய கடவுள் படைத்த சுவர்க்கத்திற்கே சென்று விடுகின்றனர்.

# வல்லமை தாராயோ...........

ஏறக்குறைய ஒரு நூற்றைம்பது ஆண்டு கால வரலாற்றுப் பூர்வீகத்தைக் கொண்ட பெருந்தோட்டத் துறையைச் சேர்ந்த மலையக மக்கள் வெறும் உழைப்பாளர்கள் மட்டுமல்ல; அன்பும் அறனும் பொருந்திய உயர்ந்த பண்பாட்டினை இயல்பாகவே வாழ்வியலாகக் கொண்டவர்கள்.

மலையும் மலைசார்ந்த இடமான குறிஞ்சியில் தமிழரின் பாரம்பரிய வழிபாட்டுத் தெய்வங்களான அம்மனும்; அழகன் முருகனும் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளமையும் இங்கெல்லாம் பக்திப் பிரவாகத்துடன் திருவிழாக்கள் நடைபெறுவதும் பெருமைக்குரியதாகும்.

இவ்விழாக்களில் கள்ளங் கபடமற்ற மலையக மக்கள் உள்ளத் தூய்மையோடு இயற்கையிலேயே தெய்வத்தைக் கண்டு துதிப்பதை நாம் காணலாம். தெய்வ வழிபாட்டுடன் தம் மரபு சார்ந்த கலைகளையும் தெய்வீகத்துடன் போற்றி பாதுகாத்து வளர்த்து வந்துள்ளனர்.

மாத்தளை வடிவேலன்

இன்று நம் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ள கலைகளின் வேர்களாக இவ்வாலயங்களில் ஆடப்பட்ட கூத்துக்களையும் தெய்வமேறிய ஆடல்களையும் நாம் கொள்ளலாம்.

மதத்திற்கும்; கலை வடிவங்களுக்கும், மக்கள் வாழ்க்கைக்கும் பிரிக்கமுடியாத உறவு இருப்பதைப் பண்பாட்டின் அடிப்படையை அவதானிக்கும் போது தெரிகின்றது. இந்து கலாச்சாரமும் இந்த அடிப்படை உண்மையை உலகிற்குத் தெள்ளென உணர்த்துகின்றது.

இத்தனை ஏற்றமிகு கலாச்சாரத்தினையுடைய மலை

(11ம் பக்கம் பார்க்க)

# உயிரினும் மேலாக ஓம்பப்படுவது ஒழுக்கமே !

அன்புள்ள தம்பிக்கு!

சென்ற இதழில் பிரசுரமான ''காலத்தின் கோலம்'' என்ற தலைப்பிலான கடிதத்தின் சாராம்சங்களை வாசித்து விளங்கிக் கொண்டிருப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன், உங்களின் வளமான வாழ்விற்கு வேறு சில கருத்துக்களை இவ்விதழில் உங்களுடன் பரிமாறிக் கொள்ள விரும்புகின்றேன்.

வாழ்க்கை என்பது இன்று நேற்று நாளையுடன் மாத்திரம் முடிவடைவதொன்றல்ல! அது ஒரு ஆயிரங் காலத்துப் பயிர். அந்தப் பயிர் வளமுடன் செழித்து வளர வேண்டுமெனில், அதற்கு நற்பண்புகள், நல்லொழுக்கம், இலட்சியம் போன்ற இன்னோரன்ன, சிறந்த பசளையிட்டு நன்னூல் எனும் நீரைத் தினமும் ஊற்றிப் பக்குவத்துடன் வளர்க்க வேண்டும். அப்போதுதான் அப்பயிர் இலட்சியமுள்ள ஒழுக்கமுள்ள வடிவாக உருமாறும்.

ஒரு மனிதன் எத்தனை வருடங்கள் வாழ்ந்தான் என்பதை விட அம்மனிதன் எவ்வாறு வாழ்ந்தான் என்பதே நாம் வாழும் சமுதாயத்தின் மத்தியில் ஆராயப்படுகின்றது.

இலட்சியமற்ற காட்டுமிராண்டியாகப் பல வருடங்கள் வாழும் மனிதரை விட; இலட்சியமுள்ள ஒழுக்கமுள்ள ஒரு சில வருடங்கள் வாழும் மனிதரையே இவ்வுலகம் போற்றுகிறது. அவனையே பின்பற்றுகிறது.

''ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்''.

என வள்ளுவப் பெருந்தகை ஒழுக்கத்தை உயிரினும் பெரிதாக மதிப்பிடுகின்றார்.

பாடசாலையில் படிக்கும் போதே கல்வியுடன் ஒழுக்கமும் சேர்த்துப் புகட்டப்படுகின்றது. அறிஞர்கள், பெரியார்கள், ஒழுக்கசீலர்கள் போன்றவர்களின் வாழ்க்கை வரலாற்றை உதாரணமாக எடுத்தியம்புகிறார்கள்.

ஆனாலும், இன்றைய பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஒழுக்கம் என்பது பூச்சியமாகவே இருப்பதாக எண்ணத் தோன்றுகின்றது. ''ஒவ்வொரு நாட்டிலும் உயர்ந்த சமூகம் உருவாகக் கல்வியைவிட ஒழுக்கத்தைத்தான் அவசியம் கற்பிக்க வேண்டும்'' என்றார் தத்துவரான ரூஸ்வெல்ட் என்பவர்.

## மனிதன் எவ்வாறு வாழ்கின்றான் - வாழ்ந்தான் என்பதே நாம் வாழும் சமுதாயத்தின் மத்தியில் ஆராயப்படுகின்றது!

ஆசான்களின் அறிவுரைகளை மீறுதல், அவர்களை அவமதித்தல், மிரட்டுதல்; பாடசாலையில் படிக்கும் போதே புகை பிடித்தல், மது அருந்துதல், கொள்ளையடித்தல், மற்றும் தற்போது மிகவும் பிரபல்யமான ''தூள்'' (ஹெரோயின்) அருந்துதல் போன்ற தீய பழக்கங்கள் மாணவர் மத்தியில் நாளுக்கு நாள் காட்டுத் தீ போலப் பரவி வருகின்றது. இதனால் மாணவ சமுதாயத்தின் ஒளிமயமான எதிர்கால வாழ்க்கையே கேள்விக் குறியாக அமைந்து விடுகின்றது.

ஹெரோயின் என்பது போதையைத் தூண்டும் ஒரு வகை வெண் துகள்கள். அதை அருந்தியதும் தன்னை மறந்து இன்ப வெள்ளத்தில் வானில் உயரப் பறப்பது போன்ற உணர்வுகள்.

மதுவிலும் கொடிய இவ் ஹெரோயின் தொடர்ந்து அருந்தும் போது எலும்புகளின் பலம் குன்றி உடலின் வலுவினை இழக்கச் செய்கின்றது. உடல் மெலிந்து உருக் குலைகின்றது. மேலும் அதனால் மன நோயும் உருவாகின்றது. இறுதியில் மனித உயிரையே குடிக்கின்றது.

மனிதனை சிறுகச் சிறுகக் கொல்லும் ஹெரோயின் மக்கள் மத்தியில் பரவலாக அருந்தப்படுகின்றது.

ஹெரோயின்பாவனையை உடனடியாக அரசாங்கம் தடைசெய்தல் வேண்டும். இதனை விற்பனை செய்பவர்களை, இறக்குமதி செய்பவர்களை இனங் கண்டு தக்க தண்டனை வழங்க வேண்டும். மதிகெட்ட இச்செயல்களைச் செய்பவர்களுக்கு மத்திய கிழக்கு நாடுகள் வழங்கும் தண்டனையே சாலச் சிறந்தது.

அரசாங்கத்தின் உயர் பதவிகளில் வகிக்கும் ஒரு சில உத்தியோகத்தர்களே இவ்வகையான கீழ்த்தரமான செயல்களைப் புரியும் போது ''வேலியே பயிரை மேயும்'' கதையாகிவிடுகிறது! நேர்மையுள்ள, உண்மையாக மக்களுக்குச் சேவை செய்யும் அதிகாரிகள் இவ்வகையான புல்லுருவிகளை இனங் கண்டு சமுதாயத்தின் மத்தியில் அவர்களை நிறுத்த வேண்டும், தகுந்த தண்டனையும் வழங்க வேண்டும் என்பதே அண்ணாவின் பேரவாவாகும்.

பாதுகாப்பு அமைச்சு சுகாதார அமைச்சு ஹெரோயின் கள்ளத்தனமாக இறக்குமதிசெய்வதை, விற்பனை செய்வதைத் தடுக்கத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்குமா? அல்லது பாராமுகமாகத் தொடர்ந்தும் இருந்துவிடுமா?

வியாபார நோக்கத்திற்காக, வெறும் பண நோட்டுக்காக எலும்பை உருக்குலையச் செய்யும் ஹெரோயினை விற்பனை செய்யும் மனித ஐந்துக்கள், தமது சமுதாயம் சீர்கெட்டுச் சிதைந்து சின்னா பின்னமாகுவதை உணரமாட்டார்களா?

எமது இளஞ் சிறார்கள் நாளுக்கு நாள் அதற்கு அடிமையாகி ஈற்றில் அவர்களையே அந்த ஹெரோயினுக்கு அர்ப்பணிப்பதை அந்த மதிகெட்ட மனித ஐந்துக்களின் செவிகளுக்கு எட்டவில்லையா?

என்ன கொடுமை இது?
ஏன் இந்த போதை?

வியாபாரம் என்பது வெறும் பணத்திற்காக மட்டுமல்ல! மக்களுக்கு சேவை செய்யும் ஓர் உன்னதமான சேவையே!

தம்பிமார்களே! தங்கைமார்களே! வாழ்க்கையெனும் பாதையில் நீங்கள் தொடரும்போது உங்கள் ஒளிமயமான வாழ்க்கைக்குத் தீங்கு விளைவிக்கும் எவ்விதமான பொருட்களையோ அன்றி நயவஞ்சகர்களையோ காண நேரிடின் தூர விலகிச் செல்லுங்கள்.

( 11ம் பக்கம் பார்க்க)

ஆசிரியர்,
இந்து கலாசாரம்,
கொழும்பு.

தம்பிலுவில்,
திருக்கோயில்,
1.3.89.

ஐயா,

### திருநாவுக்கரசு நாயனர் குருகுலம்

நிதி பற்ருக்குறையினுல் மேற்படி குருகுலத்தின் கட்டிட வேலை பூர்த்தியடையாமல் உள்ளது. அனுதைச் சிறுவர்களின் பராமரிப்பு தடைப்படுகிறது இதற்குத் தங்களால் இயன்ற நிதியுதவியை அளித்து உதவுமாறு கோருகிருேம்.

இவ்வண்ணம்,
**க. தம்பையா,**
தலைவர்,
திரு. நாயனர் குருகுலம்.

## பெற்றவளை மறப்பதுவோ!

மதம் மாறும் மனிதர்களே!
மதி இழந்தேன் பிறமதத்தைச்
சதம் என்று நினைத்தேனே,
சார்ந்திடுவீர், எதற்காக?
இத மாகப் பேசிடு வார்,
இந்து மதம் பிழை யென்பார்,
உத விகள் செய்வ மென்பார்,
உட் பொருளை அறிவீரோ?

பன்னிரு திரு முறைகள்,
பாடிய நாயன்மார்,
சொன்னலம் அறியாமல்,
சுவைத்தேனை ருசிக்காமல்,
என்ன பிழை கண்டீர்,
இந்து மதத் தத்துவத்தில்?
பின் ஏனே நீங்கள்,
பிற மதத்தைத் தழுவிடுவீர்?

ஆசை வலைப் பட்டு
அகல் விளக்கை நாடுகின்ற,
ஈசலைப் போல வன்ருே!
இருக்கின்றீர் ஏன்பிறப்பீர்!
பாசமுடன் தாய்ப் பாலைப்,
பருகி வளர்ந்தவர்காள்!
நேசமுடன் பெற்றவளை
நீங்கள் மறப்பதுவோ?

**—கனசரத்தினம் சாந்தி**
பொத்துவில்.

# இந்துகலாசார மன்றங்கள்



அமரர் ம.க. விஜயசுந்தரம்

இந்து மதம் என்பது மற்றைய மதங்கள் போல் யாரோரு தனி நபரையும் தலைமையாகக் கொண்டு இயங்குவதல்ல. இன்னும் சொல்லப் போனுல் மதம் என்ற சொல்லுக்கு இன்றுள்ள கருத்துப்படி இந்து மதம் ஒரு மதமேயல்ல. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் சிந்து நதித் தீரத்தில் வாழ்ந்து வந்தவர்களை சிந்துக்கள் என்றும், அவர்களின் ஆத்மீக ஆராய்ச்சிகளை சிந்து மதம் என்றும் நாளடைவில் அழைக்கப்பட்டன. பின்னர் சிந்து என்ற சொல் மருவி இந்து என்ருகியது என ஆராய்ச்சியாளர்கள் சொல்கிருர்கள்.

இந்து மதம் அநாதியானது. ஆழ்கடலை ஒத்தது இந்து மதத்தை அடக்கி ஒடுக்கும் நான்கெல்லைகள் ஏதும் இல்லை. ஆழ்கடலுக்குக் கரைகள் இல்லையல்லவா? இந்து மதத்திற்கு, எம்மதமும் சம்மதமே. மனித வாழ்விற்கு வேண்டிய நல்ல அம்சங்கள் எல்லாம் அதன் தத்துவங்கள். ஆதலால் இந்து மதம் என்றும் வளர்ந்து, விரிந்து பரவித் தழைக்கும் ஆலமரம் போன்றது. அதனுடைய கலைகள், கலாசாரங்கள், பண்பாடுகள் எல்லாம் அதன் அவயவங்கள். ஊன மற்ற ஒரு வாழ்வை ஒரு இந்து அடைய விரும்பின் இந்துக்களின் கலை, கலாச்சாரம் பண்பாடுகளைப் பேணி வாழ வேண்டியவனுப் அவன் இருக்கின்ருன். அத்தகைய வாழ்வுக்கு வழி காட்டுவதற்கே இந்து கலாசார மன்றங்கள் சேவை செய்ய வேண்டும்.

இந்து கலாசாரம்

(இந்து சமய திங்கள் இதழ்)

**சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. | 30.00 |
| ஆறு மாதம் | ரூ. | 15.00 |
| மூன்று மாதம் | ரூ. | 7.50 |
| தனிப் பிரதி | ரூ. | 2.00 |

விவரங்களுக்கு:—

நிர்வாகி,
இந்து கலாசாரம்,
39/23, நெல்சன்
ஒழுங்கை, கொழும்பு 3.

## நல்ல பணி

அன்புடையீர்,

தங்களின் இந்து கலாசார திங்கள் வெளியீடு கிடைக்கப் பெற்ருேம். சமயத் தொண்டுகளில் சிறந்தது, எல்லோரும் வாசித்துப் பயன் பெறக்கூடியது. நல்ல பணியைச் செய்கிறீர்கள்.

இப்படிக்கு,
**க. கனகராசா**, ஜே.பி.,
அதிபர்,
மில்க்வைற் செய்தி.

# 'ஞாலத்தின் மாணப்பெரிது'

ஈழ மணித்திருநாட்டிலும் தமிழ் மக்கள் வாழும் கடல் கடந்த நாடுகள் பலவற்றிலும் துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாகுட்டி அவர்கள் ஆற்றிவந்திருக்கும் சிவத் தொண்டு உலகமறிந்ததே. இன்று தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவியின் அருளாசியைப் பெற்று தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான தலைமைப் பொறுப்பை ஏற்று ஏழ்மை நிலைமையில் வாழும் பிள்ளைகளுக்கென்று இல்லமமைத்து சைவச் சூழலில் வளர்த்து கல்வி கற்பித்து வரும் தொண்டு சாதாரண தொண்டாக மதிப்பிட முடியாது.

அம்மையாரிடம் நாம் எதுவித உதவியும் கோரியதில்லை. அம்மையாரே எமது நிலைமையை அறிந்து எமக்கு ரூபாய் 500க்குரிய காசோலை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். ''காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது'' என்றார் வள்ளுவப் பெருந்தகை. அம்மையார் இந்து கலாசாரத்துக்குச் செய்த உதவியை நாமும் அப்படியே கருதுகிறோம்.

காலமறிந்து உதவும் அம்மையாருக்கு இந்து கலாசாரத்தின் நன்றி என்றும் உரித்தாகும்.



துர்க்கா துரந்தரி
செல்வி. தங்கம்மா
அப்பாகுட்டி

ஆசிரியர்,
இந்து கலாசாரம்,
கொழும்பு.

ஐயா,

வணக்கம். தங்கள் குழுவின் வெளியீடு எமக்கு ஒழுங்காகக் கிடைக்கிறது. எங்கள் சமயத்தின் பெருமை தத்துவம், உலகளாவிய இன்றைய நிலைப்பாடு அனைத்தையும் தாங்கி வரும் இவ்விதழை ஒவ்வொரு இந்து மக்களும் வாங்கிப் படிப்பதும் பரப்புவதும் இன்று மிக முக்கிய பணியாகும். மதம் மாற்றுபவர்களிலும் பார்க்க மதம் மாறுபவர்களில் மிகக் கவனம் செலுத்தப்பட வேண்டும். இன்று சைவப் பேரணி வீறு கொண்டு எழ வேண்டும். எங்கள் ஆலயத்தில்போதிய பிரசாரம் செய்வதோடு ஏழ்மை நிலையில் வாழும் குடும்பப் பிள்ளைகளை இங்கு இல்லமமைத்து சைவச் சூழலில் வளர்த்துக் கல்வி கற்பிக்கிறோம்.

எல்லா நிறுவனங்களும் ஒன்று சேர்ந்து மத மாற்றத்தை வன்மையாகக் கண்டிக்க வேண்டும். இதுவே எனது பேரவா. இத்துடன் ரூபா 500 அனுப்புகிறேன். சந்தாவாகச் சேர்த்துக் கொள்ளும்படி பணிவாக வேண்டுகிறேன்.

வணக்கம்.

இங்ஙனம்,
பணிவுள்ள,
தங்கம்மா அப்பாகுட்டி

லண்டனில்
இந்து கலாசாரம்
கிடைக்குமிடம்
★
No. 11, Durley Avenue
Pinner Middsex
Has 1JQ
United Kingdom

## அநுட்டா............

(5ம் பக்க தொடர்ச்சி)

சிவபெருமானை மெய்யன்போடு வழிபட்டுச் சித்தாந்த முத்தியாகிய பேரின்ப வீட்டை அடைய முற்படுதல் சைவப் பெருமக்களின் முக்கிய கடனாகும்.

### நாற்பது நல்வழி

நிரம்பிய தவத்தினையுடையவர்கள் உணரும் வகையில் சிவபெருமான் அருளிச் செய்த சிவ சம்பந்தமான வழி ஆகமநெறி. சிவபெருமான் ஆகமமாகி நின்று அண்ணிப்பவர் என்று மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளியுள்ளார். ஆகமம் சைவசமயத்தவருக்குரிய அருள் வழியைக் காட்டுவது. காரணாகமம் என்னும் சைவாகமத்தில், ''சிவம் சைவத்தை உண்டுபண்ணியது. சைவத்தால் சிவம் தோன்றியது'' என்று கூறப்பெற்றுள்ளது. சிவம் சைவருபத்தோடு, சேர்ந்தது. சிவத்தை அடைவதற்குரிய வழிநாற்பாதங்கள் என வழங்கும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாகும்.

### திட்சை

திட்சை என்பது தீ+க்ஷா எனப் பிரிந்து, கொடுப்பதும் கெடுப்பதும் எனப் பொருள் தரும். கொடுப்பது சிவஞானம், கெடுப்பது ஆணவம், கன்மம், மாயை என்னும் மலங்கள். மலங்களைக் கெடுத்து ஞானத்தை கொடுப்பது திட்சை. அது சிவசம்பந்தமானதால், சிவ திட்சை எனப் பெயர் பெற்றது.

சிவதிட்சை என்பதுசமய திட்சை, விசேட திட்சை, நிர்வாண திட்சை எனப் பலவகையாக உள்ளது. இவை ஓமத்துடன் கூடியவை. இவற்றுக்கு அங்கமாக நயன திட்சை, பரிச திட்சை, வாசக திட்சை, மானத திட்சை,. சாத்திர திட்சை, யோக திட்சை எனப் பலவாக உள்ளன. இவை யாவும் பெறுபவர் பக்குவங் கண்டு கொடுக்கப் பெறுவனவாகும்.

சிவதிட்சையில் ஒருபகுதி உபதேசம். இது மலபாவ தோஷங்களைப் போக்கி, அருளாகிய அநுக்கிரகத்தை அளிப்பது. அங்கே உபதேசிக்கப் பெறுவது, சிவமூல, மந்திரமாகிய பஞ்சாட்சரம் என்னும் திருவைந்தெழுத்து பஞ்சாக்கரத்தில் ''சிவ சிவ'' என்னும் இரண்டு எழுத்துக்கள் மிக மேலானவை. ''சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்'' என்று திருமூலர் தமது திருமந்திரம் என்னும் திருமுறையில் அருளியுள்ளார்.

### குருநாதன்

திட்சை வைத்து மந்திர உபதேசம் செய்தவர் குருநாதன். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையுடைய சகலர் ஆகிய எமக்குச் சிவபெருமான் குருவடிவத் தாங்கிவந்து அருள்புரிவர். எனவே திட்சா குருவைச் சிவபெருமானகவே கருதி உரிய முறையில் வணங்குதல் முறையாகும். குருவே சிவமெனக் கூறினன் நந்தி என்று திருமூலர் அருளியுள்ளார்.

நன்றி,
மில்க்வைட் செய்தி.

# எமது குடும்பம் பெரிது!



திரு. வி.பி. சாமி

எமது குடும்பம் எண்ணிலடங்காத தாய் தந்தையர்களையும், பிள்ளைகளையும் பேரன் பேத்திகளையும் கொண்டதொரு பல்கலைக் கழகம். ஆண்டுகள் முப்பத்து ஆறைக் கடந்த போதும், இன்னும் இளமைத் துடிப்புடன், ஒன்றே குலமென ஒரணியில் பரவும் எமது குடும்பமோ கும்பனித்தெரு அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமிகளின் அரவணைப்பில் உள்ளது.

1953 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 10 ந் திகதி திரு. த. சிவலிங்கம் தலைமையில் கும்பனித்தெரு அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் குடும்பமெனும் எமது வீட்டிற்கு அத்திவாரமிடப்பட்டது.

எங்கள் குடும்பத்தில் பலதரப்பட்டவர்கள்உண்டு எமக்குள் குலபேதமில்லை. ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற திருமூலர் வாக்கிற்கிணங்கக் கட்டுக் கோப்புடன் வாழுகின்றோம்

எமது ஒற்றுமையை, எமது கட்டுக் கோப்பை, எமது சமத்துவத்தை, எமது சகோதரத்துவத்தை நீங்களும் ஒருமுறை நேரில் பார்க்க விரும்பினால், கும்பனித்தெரு அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு அண்மையிலுள்ள சைவ முன்னேற்றச் சங்கத்தின் நால்வர் மணி மண்டபத்துக்கு ஒரு முறை வருகை தாருங்கள். எமது குடும்பத்தை அங்கு காணலாம்.

இது மாத்திரமல்ல, ஞாயிறு தோறும் காலையில் நடைபெறும் நால்வர் சமயப் பாடசாலையில் சமய அறிவு பெறும் நூற்றுக் கணக்கான எங்கள் குழந்தைகளைக் காணலாம். காலையில் பால், பணிஸ் உட்பட மதிய உணவையும் கொடுத்துக் குழந்தைகளை அன்புடன் பராமரிக்கின்றோம். நால்வர் மணி மண்டபத்தில் நடைபெறும் கலை, கலாசார நிகழ்ச்சிகள், விழாக்கள், வரவேற்பு உபசாரங்கள் சுபகாரியங்கள் என்பன சிந்தைக்கு விருந்தாக அமையும்.

இலங்கையில் முதன் முதல் சமய வகுப்பு மாணவ மாணவியருக்குப் பகல் உணவு வழங்கி வருவதும் எங்கள் குடும்பந்தான்.

எமது குடும்பமாகிய கும்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம் கலை, இலக்கியத்துறைக்குத் தம் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்துள்ளது.

தமிழரின் பாரம்பரிய கலைகளில் ஒன்றான பரத நாட்டியத்தை எமது இளஞ் சந்ததியினர் முறையோடு பயிலுவதற்கு 'நடனாலயம்' ஒன்றை அங்குரார்ப்பணம் செய்து ஓராண்டு விழாவை கடந்த 4.3.89 ல் இராம கிருஷ்ண மண்டபத்தில், விமரிசையாகக் கொண்டாடியது.

எமது குடும்பம் மென்மேலும் பல்கிப் பெருகித் தமிழுக்கும், இந்து மத, கலை கலாச்சார வளர்ச்சிக்கும் தொடர்ந்து சேவையாற்ற எம்முடன் அனைத்து தமிழ் பேசும் மக்களும் ஒன்று பட்டு உறுதுணை செய்வீர்களாக!

---

**உயிரினும்.........**

(8ம் பக்க தொடர்ச்சி)

துஷ்டனைக் கண்டால் தூர விலகு!

அப்படியாயின், நீங்கள் உங்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பீர்கள்; மேதைகளாவீர்கள்; கல்விமான்களாக மனித சமுதாயத்தில் மதிப்பளிக்கப்படுவீர்கள்.

அண்ணா உங்களுக்கு மேலும் மேலும் பல அறிவுரைகளைத் தொடர்ந்து எழுதியவண்ண மிருப்பார்.

இப்படிக்கு,
அண்ணாவியார்.

---

**வல்லமை...........**

( 7ம் பக்க தொடர்ச்சி)

யகத்தின் இளந் தலைமுறை தமது பண்டைய பெருமைகளை எவ்வாறு நிலை நிறுத்தப்போகின்றது? என்பதோடு; எதிர்கால மலையகம் ஏற்றம் பெற எப்படி உழைக்கப்போகின்றது என்பதும் நிர்தாட்சணியமான பகைப் புலத்தில் நின்று காத்திரமாகச் சிந்திக்கும் சமூகநல ஆர்வலரிடையே எழுந்துள்ள கேள்வி மட்டுமல்ல விசனமுமாகும்.

சமகாலத்தில் இந்து சமயத்தவரைப் பல்வேறு சக்திகள் பல தந்திரோபாயங்களைக் கையாண்டு மதமாற்றம் செய்கின்றன. மதம் ஒரு மனிதனின் தனிப்பட்ட விடயமாகும். ஆனால் அப்பாவி மலையக மக்களுக்கு உதவி புரிகின்றோம் என்ற போர்வையில் மதமாற்றம் செய்வது வெறுக்கத்தக்க செயலாகும். இன்று சமூக வாழ்வில் பல்வேறு சூழ்நிலைகளில் துன்பங்களுக்குட்பட்டிருக்கும் மக்களை மதமாற்றம் செய்வதால் விடிவினை ஏற்படுத்தி விடலாம் என்பது; பாமரத்தனமான மூடக் கொள்கையாகும்.

விமர்சனத்திற்குரிய இவ்வேளையில் இந்து இளைஞர்களாகிய நமக்குப் பாரிய சமூகக் கடமை ஒன்று உண்டு. இலங்கை அரசு இந்து சமயம், இந்து கலாச்சாரத்திற்கெனத் தனி அமைச்சினை ஏற்படுத்தி இந்து மக்களுக்குச் சேவை செய்கின்றது. இவ்வமைச்சினைப் பொறுப்பேற்ற மாண்புமிகு அமைச்சர்களும் பாரிய திட்டங்களைத் தீட்டி; அதனைச் செயற்படுத்தி நம் மேம்பாட்டிற்காக அருஞ் சேவையாற்றுகின்றார்கள்.

இவ்வமைச்சின் உயர்வான பணிகளுக்கு ஒத்துழைப்பு நல்குவதோடு; நாமும் எம்மாலியன்ற திருப்பணிகளை, பொதுப் பணிகளை ஆற்ற வேண்டும். வாலாற்றின் வரிகளில் தமிழ் பக்தியின் மொழியெனப் பக்திப் பிரவாகத்தை ஓடச் செய்த பல்லவர்கால பக்தி பிரவாகத்தை ஏற்படுத்த வேண்டும் பக்திநெறி இயக்கம் பரவலாகச் செயற்பட வேண்டும்.

இதில் தோட்டப்பகுதிகளில் படித்த இளைஞர்கள், யுவதிகளின் பங்கு முக்கியமானது. நாம் படித்து விட்டோம் என்று மக்களைவிட்டு நீங்கி தனி வர்க்கமாக நின்று இனங் காட்டிக் கொள்ளக் கூடாது. சைவ ஆலயங்களில் பூசைகள், திருவிழாக்கள் நடைபெற முன்நின்று உழைக்க வேண்டும். அங்கெல்லாம் கூட்டுப் பிரார்த்தனைகள், வழிபாடுகள் இடம் பெறச் செய்ய வேண்டும்.

(மிகுதி அடுத்த இதழில்)

# "இந்து கலாசாரம் பணிதொடர சைவ உலகம் நல்லாதரவு வழங்க வேண்டும்"

**சென்னை சைவ சித்தாந்த பெருமன்றம், கொழும்பு விவேகானந்த சபை, ஈழத்து திருநெறித் தமிழ் மன்றம் ஆகியவற்றின் ஆயுள் உறுப்பினரும் ஓய்வு பெற்ற ஓ. ஏ. யுமான பண்ணாகம் சுழிபுரத்தைச் சேர்ந்த சைவ மாமணி சோ. க. வேலாயுதர் நமது இந்து கலாசாரத்தைப் பற்றி பின்வருமாறு எழுதுகிறார்.**

இந்து கலாசார ஏட்டில் பல நல்ல விடயங்கள் வெளிவருவது போற்றற்குரியது. சிறப்பாக மலையகத்து மதமாற்றம் பற்றி அருமையான கருத்துகள் அமைந்த கட்டுரைகள் வெளிவந்துள்ளன. அவற்றிற் கூறப்பட்டவற்றைச் செயற்படுத்தினாற்றான் பிரயோசனம் உண்டு. செயல்தான் வேண்டும். அதற்கான வழிவகைகளை ஊக்கத்துடன் கையாளுதல் வேண்டும். இதற்கு மன ஊக்கமும் உற்சாகமும் நேர அவகாசமும் விடா முயற்சியுமுடைய தொண்டுள்ளம் படைத்த தொண்டர்களைக் கண்டுபிடித்து வழிப்படுத்த வேண்டும் உடல் உழைப்பை நல்கக் கூடிய இளைஞர்கள் முன்வர வேண்டும் அவர்களுக்கு உறுதுணை புரியவும் வேண்டும்.

மலையகத் தொண்டு சின்னாட் புரிந்து பின்னர் விடவளருவதன்று. அது தொடர்ந்தும் விடாது செய்து வர வேண்டிய ஒன்று என்பதனை மலையகத்து ஒரு காலத்து சைவப் பிரசாரகராக இருந்த வகையில் நானறிவேன். சுயநலமற்ற பொதுநலத் தொண்டர் இதில் ஈடுபட வேண்டும். நிற்க

தங்கள் ஏற்றமுறு ஏட்டில் கவிஞர் சி. அழகுப்பிள்ளையின் பாடல் உள்ளத்தை உணர்வு வெள்ளத்தில் ஆழ்த்துவதாயுள்ளது. சிந்திக்கும் திறனில்லாத் தொழிற் குலத்தார், 'வந்தங்கு வசமாக்கும் போதகர்கள்', 'இளைய தலைமுறையினர்கள் அறியாமைச்சேற்றில் அமிழ்கின்றார்' ஆலய பரிபாலகர்களின் ஆடம்பரச் செலவு என்ற வரிகள் உள்ளத்தைத் தொடுகின்ற உண்மை வார்த்தைகள்.

அதுமட்டுமல்ல பெரியார், காலத்தின் தேவையறிந்து கலை, சமூக, கலாசார, சமயப்பணி செய்யும் திரு. வி. ரி. வி. தெய்வநாயகம்பிள்ளை, காயத்திரி சித்தர் முருகேசு சுவாமி போன்ற அருளாளர்களை அறிமுகஞ் செய்துள்ளமை வரவேற்கத்தக்கது. சித்தர் அவர்கள் புதுடில்லியில் உலக ஆன்மீக அரசாங்க மகாநாட்டில் கௌரவிக்கப் பட்டமை, அவர் போன்ற அறவாழ்வு வாழ்பவர்களைக் கௌரவித்தமைக்கு நிகராகுமன்றோ.

விபூதி என்ற கட்டுரை மிகவும் உருக்கமாகவுள்ளது உண்மையான நம்பிக்கை வேண்டுமென்பது ரவி சுவாமிகளின் செயலால் அறியக் கிடக்கிறது. இக்காலத்தவர் நம்பத் தயங்குகின்றமைக்கு எடுத்துக்காட்டு. இது நிற்க.

இந்து மாமன்றம் அண்மையில் கூடி சிவதொண்டரணி' என்ற அமைப்பை நிறுவுவது பற்றித் தீர்மானித்தனர். ஆகவே பல சங்கங்களை உள்ளடக்கிய இந்து மாமன்றத்துடன் இணைந்து ஒன்றுபட்டு ஒற்றுமையாக ஒரு வழியில் செயற்படுவது இந்து மக்களுக்கு ஒரு முகப்பட்டு உழைக்க வழி சமைக்கும் அல்லவா. தங்கள் பத்திரிகை மூலம் இதனைச் செய்ய முன்வந்தால் மிகவும் நல்லது. வாய்ப்பான தருணமும் இஃதே.

5ம் இதழிலுள்ள ஆசிரிய வசனங்கள் பாராட்டுக்குரியன. இளைஞர்கள், எதிர் சமூக பெரியவர்கள், அவர்களை ஆற்றுப்படுத்தவேண்டிய பொறுப்பு நம்முடையதே. அவர்களும் முதியவர்களை மதித்து அவர்கள் அறிவுறுத்தல் வழி நடத்தல்களுக்கு அமைவாக நடக்க முன்வரின் எம் சமயம் அழியாப் பெருநிலை எய்தும் என்பதற்கையமின்று.

தங்கள் பணி மேலும் மேலும் தொடர, சைவ உலகம் நல்லாதரவு வழங்க வேண்டுமென்றும் இதற்கு எல்லாம்வல்ல திருச்சிற்றம்பலவன் திருவருள் புரிந்து உறுதுணை செய்ய வேண்டுமென்றும் பிரார்த்தித்து அமைகிறேன்.

— நன்றி — வணக்கம்.

---

**இந்து மதம்...........**

( 1ம் பக்க தொடர்ச்சி)

தொண்டாற்றிவருகின்றன. அவ்வாறான சங்கங்களுள் ஒன்றான **கொள்ளுப்பிட்டி இந்து கலாசார மன்றம்** கடந்த பத்தாண்டுகளாக இந்துக்களுக்கும் இந்து சமயத்துக்கும் ஆற்றிவரும் சிறந்த தொண்டை யிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

அம்மன்றத்தினர் கடந்த ஓராண்டு காலமாக வெளியிட்டு வரும் "**இந்து கலாசாரம்**" சமயக் கல்வி தொடர்பான பலவேறு பயனுள்ள அம்சங்களைக்கொண்டதாக விளங்குகின்றது.

கொள்ளுப்பிட்டி இந்து கலாசார மன்றத்தாரின் தொண்டுகள் மென்மேலும் சிறப்படைய உளமார வாழ்த்துகிறேன்.

**பாலவிகாஷ்...........**

( 6ம் பக்கம் தொடர்ச்சி )

த்தை வகுத்துள்ளார். இச்சீரிய கல்வி முறை உலகம் பூராவும் பரவினால் மனித சமுதாயத்திற்குப் பெரும் நன்மை ஏற்படும்.

இன்று கொள்ளுப்பிட்டி இந்து கலாசார மன்றத்தின் கீழ் அதன் இணைப் பிரிவினதாக விளங்கும் சாயி பஜனை மண்டலி பிரதி ஞாயிறு தோறும், நடாத்தும் பாலவிகாஷ் வகுப்புகள், விடாது பணிதொடர வேண்டும் என வாழ்த்துகின்றோம். சனாதன தர்மம் வளர பஞ்சசீலங்களின் அடிப்படையில் அமைந்த பாலவிகாஷ் கல்வி முறை இன்றைய மாணவசமுதாயத்திற்கு ஒரு வரப்பிரசாதமே!

# சாதி பேதம் மறந்து சமத்துவம் காண்போம்!

**தமிழர் மத்தியில் நிலவும் தரக்குறைவான பண்புகளும், இந்து மதத்தவரின் குலபேத வேற்றுமைகளும், மாற்றுந்தாய் மனப்பான்மையுமே, இந்து மதத்தவர் இந்து மதத்தின்மீதுள்ள வெறுப்புக்கும், விரக்திக்கும், மதமாற்றத்திற்கும் மூலகாரணங்களாகும்!**

''சாதிகள் இல்லையடி பாப்பா உயர் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல்பாவம்'' என்று அன்று பாடிய பாரதியின் கனவு இன்னும் நனவாக்கப்படவில்லை.

தமிழர் சமுதாயத்தில் சாதி பேதம் தீண்டாமை இன்னும் ஒழிக்கப்படவில்லை இன்னேரன்ன சாதிகளை உருவாக்கிய தமிழ் இனம் இன்று மென்மேலும் சீரழிந்த பாதையில் சென்று கொண்டிருக்கின்றது.

இத்துடன் மாத்திரம் நின்றுவிடாமல், யாழ்ப்பாணத்தான், மட்டக்களப்பான், திருமலையான், தீவான், மலைநாட்டான், கொழும்பான் போன்ற பேதமை எண்ணங்களும் இன்றைய தமிழ் சமூகத்தின் மத்தியில் உருவாகிக்கொண்டுதான் வருகின்றன.

சமத்துவம், சமாதானம், சகோதரத்துவம் என்ற இதயக்குமுறலின் குரலொலியையின்று வானொலி தொலைக்காட்சி, பத்திரிகை போன்ற மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் தினமும் கேட்கவும் அறியவும் முடிகின்றது. கூடி வாழப்பிறந்த மனிதன் ஒன்றிணைந்து ஒற்றுமையும், சமாதானமும், சௌஜன்யமும் நிறைந்த சமுதாயத்தை உருவாக்க ஆவல் கொள்கின்ருன். ஆனுல் இந்த ஏக்கத்தை எழும்ப விடாமல் நசுக்கி வைக்கவும், ஒற்றுமையைச் சீர்குலைக்கவும், மக்களிடையே பேதமை, உணர்வுகளைத் தூண்டவும் அதே சமுதாயத்தில் ஒரு சில புல்லுருவிகள் இருக்கத்தான் செய்கின்றன. இந்தப் புல்லுருவிகள் வேருடன் களைந்தெறியப்பட வேண்டும்.

ஆறறிவு படைத்தமனித இனம் சமத்துவமாக சகோதரத்துவமாகக் கூடிவாழப் பிறந்த ஓர் உயரிய இனம். மனிதன் இவ்வுலகில்வாழும் காலத்துக்கு ஓர் அளவுண்டு அப்படியிருக்க ஏன் இன்று எம்மத்தியில் இந்த சாதி பேதம் தீண்டாமையெல்லாம்?

எல்லா மனித உயிர்களும் ஒரு தாயின் கருவில் உருவாகி பத்து மாதம் சுமக்கப்பட்டுதான் பிறக்கின்றன. மனித இனத்திற்கெல்லாம் அதே செங்குருதிதான் உடலில் உத்வேகத்தை உண்டு பண்ணுகிறது வாழ்க்கை எனும் நாடகம் ஆடி அடங்கியபின் அதே மனித இனத்திற்கு ஆறடி நிலந்தான் இறுதியில் அடைக்கலம். இடைப்பட்ட இந்த நிலையற்ற வாழ்க்கையில் ஏன் இந்த சாதி பேதம் தீண்டாமையெல்லாம்?

**நாகன் ஹரிதாஸ்**

பாதையில் ஓடும் ஓர் மோட்டார் வண்டியின் பெறுமதியை நாம் மதிக்கலாம். அதேபோல் ஆகாயத்தில் பறக்கும் விமானத்தின் பெறுமதியையும் எம்மால் மதிக்க முடியும். ஆனுல் மனித உயிர்களின் பெறுமதியை எவராலும் மதிக்க முடியுமா?

சாதி பேதத்தாலும், சமத்துவமின்மையாலும், எம்மிடையே ஒருவொருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும், புரிந்துணர்வும் இல்லாததால் அன்ருடம் எத்தனையோ பெறுமதி யற்ற மனித உயிர்கள் பலியாகிக் கொண்டிருக்கின்றன. பசி பட்டினி எம்மினத்திடையே தலைவிரித்தாடுகிறது.

இந்த புரிந்துணர்வற்ற தன்மையால் எமது சமூகத்தில் மனிதன் மனிதனையே வெறுக்கின்ருன். மனிதன் தனது சமூகத்தையே, வெறுக்கின்ருன். மனிதன் தனது தாய்நாட்டையும் வெறுக்கின்ருன். இறுதியில் மனிதன் தனது மதத்தையும் வெறுக்கக் கூடிய சூழ்நிலையும் உருவாகிவிட்டது.

இதனுல் இன்று நடப்பதென்ன? எமது தமிழ் மக்கள், எமது இந்து மக்கள் மதம் மாறுகின்ருர்கள். தாய்மொழியையும் மாற்றி வருகின்ருர்கள்.

அந்தோ பரிதாபம்! எமது இந்து மதம் நாளுக்கு நாள் தளர்வுறுகின்றது. தமிழ் சமுதாயம் நாளுக்கு நாள் அழிந்து கொண்டு போகின்றது. நாளடைவில் நமது இந்து கலாசாரமும் நலிந்து விடுமோ?

இன்றைய தமிழ் சமூகம் அடைந்துள்ள இந்த இக்கட்டான நிலை மாற வேண்டும். ஒன்று பட்டு ஒளிமயமான எதிர்காலம் நோக்கி வீறு நடை போட வேண்டும்.

பசியாலும் வறுமையாலும் திண்டாடும் நமது தமிழ் இனத்தின் வாழ்வில் விடிவை காண்போம்!

உயிர்ப்பலிகளை நிறுத்தி நலிவுறும் நமது இந்து மதத்தை நாற்றிசையும் பரப்புவோம்!

சமத்துவமாக, சகோதரத்துவமாக ஒன்றே குலமென தீண்டாமைக்கு சாவு மணி அடிப்போம்!

வாழ்க தமிழ்!
வளர்க் தமிழ் சமுதாயம்!

---

(4ம் பக்க தொடர்ச்சி)

**ரிஷிகேஷத்தில்...........**

சுமார் பத்தாயிரம் அடி உயரத்தில் வாழும் இந்த துறவியின் சொற்பொழிவுகள் கடந்த மாதம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ஒரு வார காலத்துக்கு இடம் பெற்றது. கைல்ய உபநிடதம் சார்ந்த இவரது சொற்பொழிவுகள் கொழும்பு வாழ் இந்துக்களைப் பெரிதும் கவர்த்தன.

---

**கொழுந்து**

ஆசிரியர்:
**அந்தனி ஜீவா**

மலையகத்திலிருந்து காலாண்டுதோறும்மலர்ந்து கொண்டிருக்கும் இலக்கிய சஞ்சிகை

**கொழுந்து**

மலையக மக்களிடையே கொழுந்து சஞ்சிகையை விநியோகிக்க விரும்பும் இளைஞர்கள் கீழ் கண்ட விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

தனிப்பிரதி விலை ரூ. 5/-

நிர்வாகி
கொழுந்து
57, மகிந்த பிளேஸ்
கொழும்பு 6

இந்து மக்களின் கவனத்திற்கு !

# அங்வெல ஆலயத்தின் அவலநிலை

கொழும்பிலிருந்து அவிசாவலைக்குச் செல்லும் பாதையில் இருபது மைல் தூரத்தில் அங்வெல என்ற இடம் இருக்கிறது. போகும் பாதை அருகாமையில் ஒரு இறப்பர்த் தோட்டம். அந்த தோட்டத்தில் குடிகொண்டிருக்கும் மகா மாரியம்மன் ஆலயத்தைப் பார்த்தால் அதிசயத்துப் போய் விடுவீர்கள்.

அண்மையில் அவிசாவலை சென்று திரும்பும் வழியில் அந்த இறப்பர்த் தோட்டத்து மக்களைச் சந்தித்து உரையாடிக் கொண்டிருந்த பொழுது ஒரு மூதாட்டி ''தம்பி! நாங்கள் வாழும் வாழ்க்கையைப் பாருங்கள், எங்களுக்கு ஒரு உதவியும் வேண்டாம். பாழடைந்து போயிருக்கும் எங்கள் கோவிலைச் சீர்திருத்தித் தர உதவுங்கள்'' என்றார்.

பின்னர் அவர்களின் வேண்டுகோளுக் கிணங்கி ஏதோ தோட்டத்தில் இருக்கும் சிறிய கோவில் என்று எண்ணியபடி அந்த கோயி

அந்தனி ஜீவா

லைப் போய்ப் பார்த்தேன். என் விழிகள் வியப்பால் விரிந்தன. எத்தமைய அற்புதமான கோவில் சிதைந்து காட்சியளிக்கிறது.

மலையக கலை இலக்கியப் பேரவையின் தலைமைக்குழு உறுப்பினரும், இந்து கலாசார திணைக்களத்தில் பணியாற்றும் நண்பர் மாத்தளை வடிவேலனும் நானும், முன்னாள் அமைச்சர் திரு. செ. இராசதுரையிடம் இந்தக் கோவில் நிலைமை தெரிவித்தோம். உடனே, அமைச்சர் பலவிதமான தேர்தல் பணிகளுக்கிடையே இந்தக்கோவிலைப் பார்க்க வந்தார்.



முன்னாள் இந்து கலாசார விவகார தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சர் திரு. செ. இராஜதுரை கோவிலை பார்வையிடும் காட்சி

அவரும் ஆச்சரியப்பட்டுப் போனார். அங்கிருந்த நந்தி சிலையைப் பார்த்து மட்டக்களப்பில் கூட இத்தகைய நந்தி சிலை இல்லை.....இந்த கோவிலைப் பாதுகாப்பது நமது கடமையாகும் என்றார்.

பிறகு அந்தத் தோட்டத்து மக்களிடம் ''நான் ஒன்பது ஆண்டுகளாக அமைச்சராக இருக்கிறேனே, ஒருவராவது இந்த கோவிலைப் பற்றித் தெரிவிக்கக் கூடாதா.........'' என்று கேட்டதுடன்..... என்னிடமும், அருகில்நின்ற மாத்தளை வடிவேலனிடமும் உடனடியாக இதற்கு நடவடிக்கை எடுங்கள் என்றார்.

நானும் இந்து கலாசார திணைக்களப் பணிப்பாளர், திரு. பாஸ்கரதாஸிடம்இது பற்றிக் கூறினேன், ''அமைச்சரும் உடனே கோயிலைச் சென்று பார்த்து நடவடிக்கை எடுக்கச் சொன்னார்'' நாட்களோ நகர்ந்து விட்டன. நிலைமைமாறி விட்டது.

ஆனால், இப்பொழுது இந்து கலாசாரத் திணைக்களத்திற்குப் பொறுப்பாக இணையமைச்சராகத் திரு. பி. பி. தேவராஜ் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் இந்த அங்வெல ஆலய விடயத்தில் அக்கறை காட்டி நடவடிக்கை எடுப்பார் என நம்புகிறேன்

---

## சிவராத்திரி........

( 3ம் பக்க தொடர்ச்சி)

வும் காத்து நிற்கும் சொக்கைத் தியானத்திலிருந்த தாகக் கொள்ள இயலுமா?

எண்முறை சாத்திரப்படி சிவராத்திரி என்னும் பதம் சி + வ + ரா என்பது 5 + 4 + 2 = 11 என்பதையும், எஞ்சிய ''த்திரி'' என்பது மூன்றையும் குறிக்கும். அதாவது ஐம்புலன்கள்; ஐந்து ஞானேந்திரியங்கள்; மனம் ஆகிய மூன்றும் சேர்ந்து உருவாகிய பதினொரு ருத்திரங்களும் மனிதனைப் பயனற்ற நிலையற்ற இன்பங்களை நாடி அலையச் செய்கின்றன. அவனைப் பாழாக்கி கண்ணீர் விடச் செய்கின்றன.

ஆனால் ஆத்மாவை நாடி அதன் மீது நம்பிக்கை கொண்டால், அப்பதினொன்றின் மீதும் தன் கிரகங்களை வீசி மனிதன் தன்னையறியும் நிலையை நோக்கி முன்னேறும் பாதையில் உதவி புரிகின்றது. ஆத்மாவின் ஒளிக் கதிர்கள் அறிவை திசை திருப்பி ஒளிபெறச் செய்கின்றன. ஒளிபெற்ற அறிவு மனதை நல்வழிப் படுத்துகிறது. புலன்கள் கட்டுப் படுத்தப்படுகின்றன. ஒருவன் செல்லும் பாதை இதனால் வரையறுக்கப்படுகின்றது. தன் மெய்யுணர்வுகளுக்கு ஏதுவான கூரறிவின் துணை கொண்டு ஆன்மீக பாதையில் செவ்வனே விரைகின்றான்.

செய்த தவறுகளை உணர்ந்து; இனிமேலாவது மங்களகரமான எண்ணங்களை மனதில் கொண்டு சிவனின் திருவுருவைப் பெற்று உய்வோமாக!

உங்களுக்கு தேவையான சகல விதமான எவர் சில்வர், அலுமினியம்,
பிளாஸ்டிக் பொருள்கள், மண்ணெண்ணை குக்கர்கள்,
டோர்ச் லைட்டுகள, மின் அழுத்திகள் இன்னும் பல
வீட்டுப் பாவனைப் பொருட்கள்
மொத்தமாகவும்
சில்லரையாகவும்
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய
இடம்

**லங்கா அலுமினியம் விநியோகஸ்தர்கள்**

இறக்குமதியாளர்களும், மொத்த விற்பனையாளர்களும்

34, டாம் வீதி, கொழும்பு 12. தொலைபேசி இலக்கம்: 31649

**தென்னகத் திருக்கோயில்கள்**

நூலாசிரியர்:
**சந்திரிகா சோமசுந்தரம்** எம். ஏ., எம். பில்

எழுதியுள்ள
புதிய நூல்கள் விற்பனைக்குண்டு

1. **சூர்ய நமஸ்காரம்** - சூரிய வழிபாடு பற்றிய ஆய்வு
2. **மக்கள் தொடர்பு சாதனமும் மகளிரும்** - ஆய்வு நூல்
3. **அந்தரே கதைகள்.**

கிடைக்குமிடம்:-

**சப்தகிரிஸ்**

27, சில்வர் சிமித் லேன்,
கொழும்பு 12.

மனிதன்

தன்னைத்தானே உணரும்போது

சமூகம்

தானாகவே திருந்திவிடும்!

இந்து மதத்தின் தேவையை உணர்ந்து

சேவையாற்றும் இந்து கலாசாரத்திற்கு

வாழ்த்துக்கள்!

அன்பளிப்பு

ஆர். வி.


இப்பத்திரிகை கொள்ளுப்பிட்டி இந்து கலாசார மன்றத்திற்காக கொள்ளுப்பிட்டி நெல்சன் ஒழுங்கை 39/23, இல்லத்தில் வசிக்கும் ஏ. எம். துரைசாமி என்பவரால், கொழும்பு கிராண்ட்பாஸ் வீதி, 213ம் இலக்கத்திலுள்ள ஸ்டார்லைன் அச்சகத்தில் 1. 3. 89ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.